<u>இந்தியக் குடியிருப்பாளர் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக் கணக்கு)</u>
<u>இந்தியக் குடியிருப்பாளர் தனி நபர் வசதிகள்</u>

**A.P. (DIR Series) சுற்றறிக்கை எண்.53 (நவம்பர் 23, 2002)**

இந்திய ரிசர்வ் வங்கி
அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை
மைய அலுவலகம்
மும்பை **400 001**

நவம்பர் **23, 2002**

A.P.(DIR Series) சுற்றறிக்கை எண் 53

அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர் அனைவருக்கும்

அன்புடையீர்,

<u>இந்தியக் குடியிருப்பாளர் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக் கணக்கு)</u>
<u>இந்தியக் குடியிருப்பாளர் தனி நபர் வசதிகள்</u>

இந்திய அரசின் அறிவிப்பு வெளியிடப்படும் காலம் வரை A.P.(DIR Series) சுற்றறிக்கை எண்.37, நவம்பர் 1, 2002 தேதியிடப்பட்டதில் உள்ள கருத்துக்களின்படி இந்தியக் குடியிருப்பாளர் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்) கணக்குகள் ஆரம்பிக்க அளிக்கப்படும் விண்ணப்பங்களை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் ரிசர்வ் வங்கியின் குறிப்பிட்ட பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கவனத்தில் கொள்வாராக.

2. மே 3, 2000 தேதியிடப்பட்ட அறிவிப்பு எண். FEMA.10/ 2000 RB திருத்தியமைக்கப்பட்டு ரிசர்வ் வங்கி நவம்பர் 1, 2002 தேதியிடப்பட்டு அறிவிப்பு எண். FEMA.74/ 2000 RB ஐ வெளியிட்டுள்ளது. அதன்படி இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வணிகரிடம் இந்தியக் குடியிருப்பாளர் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்) கணக்கினை அவர்கள் பெற்ற அயல்நாட்டு பணம், வங்கிநோட்டுகள் மற்றும் பயணக் காசோலைகள் மூலம் ஆரம்பித்து கைக்கொண்டு நடத்திடலாம்.

3. A.P.(DIR Series) சுற்றறிக்கை எண்.37ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் தம் வாடிக்கையாளரான இந்தியக் குடியிருப்பாளருக்கு மேற்குறிப்பிட்ட கணக்கினை ஆரம்பித்து கைக்கொண்டு நடத்திச் செல்வது சரியானதாகும்.

4. அறிவிப்பு எண். FEMA.10/ 2000 RB, மே 3, 2000 தேதியிடப்பட்டதில் தேவைப்படும் திருத்தங்களை அறிவிப்பு **எண்**. FEMA.74/ 2000 RB நவம்பர் 1, 2002 தேதியிடப்பட்டதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேற்கொள்ளலாம்.

5. அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இந்த சுற்றறிக்கையின் கருத்துக்களை தத்தம் குழுவைச் சார்ந்த முகவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்லாம்.

6. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

கிரேஸ் கோஷி
தலைமைப் பொது மேலாளர்

இந்திய ரிசர்வ் வங்கி
அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை
மைய அலுவலகம்
மும்பை **400 001**

நவம்பர் **1, 2002**

அறிவிப்பு எண். **FEMA.74/ 2002 RB**

அந்நியச் செலாவணி கண்காணிப்பு
(இந்தியக் குடியிருப்பாளருக்கான அயல்நாட்டு நாணயக்கணக்கு)
(திருத்தியமைக்கப்பட்ட) விதிகள் **2002**

அந்நியச் செலாவணி கண்காணிப்புச்சட்டத்தின் FEMA 1999 (42 of 1999) ல் சட்டப்பிரிவு எண் 9ன் சட்டவிதிக்கூறு (b) மற்றும் சட்டப்பிரிவு எண் 47(2)ன் சட்டவிதிக்கூறு (e)ன்படி அளிக்கப்பெற்ற அதிகாரத்தை செலுத்துமுகமாகவும், அறிவிப்பு எண். FEMA.10/ 2000 RB மே 3, 2000 தேதியிடப்பட்டதின் கருத்துக்களின் பகுதியளவு மாற்றங்களின் மூலமாகவும் ரிசர்வ் வங்கி கீழ்க்கண்ட திருத்தங்களை அந்நியச் செலாவணி கண்காணிப்பு (Foreign Exchange Management) அயல்நாட்டு நாணய கணக்கு (இந்தியக் குடியிருப்பாளருக்காக) விதிகள் 2000 அமல்படுத்தியுள்ளது.

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

    a. இந்திய விதிமுறைகள் FEMA அந்நியச் செலாவணி கண்காணிப்பு (இந்தியக் குடியிருப்பாளருக்காக அயல்நாட்டு நாணய கணக்கு) (5வது திருத்தியமைக்கப்பட்ட) விதிகள் 2002 என்று அழைக்கப்படும்.
    b. அரசாணை அறிவிப்பு இதழில் பிரசுரிக்கப்பட்டதிலிருந்து இவை அமலுக்கு வரும்.

2. விதிமுறைகள்த் திருத்தங்கள்

அந்நியச் செலாவணி கண்காணிப்பு (இந்தியக் குடியிருப்பாளருக்கான அயல்நாட்டு நாணய கணக்கு) விதிமுறைகள் 2000ல் 5வது விதிமுறைக்குப்பின் கீழ்க்கண்ட விதிமுறை இணைக்கப்படுகிறது. அதாவது,

5. A குடியிருப்பாளர் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்)கணக்கு ஆரம்பித்து உரிமையாக்கி நடத்திச்செல்லுதல்

**I.** ஒரு இந்தியக் குடியிருப்பாளர் தன் வசமுள்ள அயல்நாட்டு நாணயம், வங்கிநோட்டு மற்றும் பயணக்காசோலைகள் மூலம் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்) கணக்கினை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களிடம் ஆரம்பித்து கைக்கொண்டு நடத்தலாம். அது குடியிருப்பாளரின் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்)கணக்கு என்று அழைக்கப்படும்.

    a. அந்த அயல்நாட்டுப் பணம் இந்தியாவில் செய்யப்படும் வாணிபம் அல்லது வேறெதையும் சாராமல் வெளிநாட்டுச்

சுற்றுலாவின்போது இந்தியர் ஒருவர் செய்த சேவைக்காகப் பெறப்பட்டிருக்கலாம்.

b. இந்தியக் குடியிருப்பாளரல்லாத ஒருவர் தமது இந்திய வருகையின்போது அவருக்கு அளிக்கப்பட்ட சேவைக்காகவோ, ஊக்கத்தொகையாகவோ உரிமையுள்ள கடமைக்கான ஈட்டுத்தொகையாகவோ அயல்நாட்டு நாணயத்தை இந்தியக் குடியிருப்பாளருக்காக அளித்து இருக்கலாம்.

c. வெளிநாட்டுச் சுற்றுலாவின்போது இந்தியக் குடியிருப்பாளருக்குக் கிடைத்த வெகுமதி அல்லது ஊக்க ஊதியமாக இருக்கலாம்.

d. அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வணிகரிடமிருந்து சுற்றுலாக் செலவுக்காகப் பெற்ற அயல்நாட்டு நாணயத்தின் செலவழிக்காத மீதமுள்ள தொகையாகும்.

**II.** அந்தக் கணக்கிலுள்ள பற்றுச்செலவுகள் நடப்புக்கணக்கானால் FEM(Current Account Translation) அந்நியச் செலாவணி கண்காணிப்பு அனுமதிக்கப்பட்ட (நடப்புக்கணக்கு நடவடிக்கைகள்) விதிகள் 2000 கருத்துக்களின் படியும் முதலீட்டுக் கணக்கு நடவடிக்கையானால் அந்நியச் செலாவணி கண்காணிப்பு அனுமதிக்கப்பட்ட நடப்புக்கணக்கு நடவடிக்கைகள் விதிகளின் படியும் அனுமதிக்கப்பட்ட செலவுகளாக இருக்கவேண்டும்.

**III.** இந்தக் நடப்புக்கணக்காகவே வட்டிவருமானம் ஏதுமின்றி நடத்தப்படும்.

**IV.** அந்தக் கணக்கில் உள்ள இருப்புத்தொகைக்கான உச்சவரம்பு ஏதுமில்லை.

கையெழுத்திடப்பட்டது

K.J. உதேஷி
செயல் இயக்குநர்